844

ARYA DHARMAM
TAMIL WEEKLY.
REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ	50
ஒரு வருஷ சந்தா	...	ரூ.	3
ஆறுமாத சந்தா	...	ரூ.	1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ.	20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ.	21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ.	8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு	8

நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஹு வைகாசி-மீ 10உ 1940-ஹு மேமீ 23உ | ஸ-21

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

நமது பிரார்த்தனை கைகூடுகிறது!! நமது தலைவர்கள் ஆங்காங்கு சுற்றுப்பிரயாணம் செய்து நமது சக்தியைத் திரட்டவேண்டுமென வெகுநாளாக வேண்டினோம். செட்டிநாட்டில் ஸ்ரீமான் நடேசய்யர் கோஷ்டி பிரசாரம் செய்வதும் மஹாஜநங்கள் உத்ஸாஹங்காட்டுவதும் மிக மிக கொண்டாடத்தக்கது.

இன்னும் பரிமளிக்கும்! பஜோரியா போன்ற வடநாட்டுத்தலைவரை அழைத்து வந்துப்ரசாரம் செய்தால் இன்னும் அதிக பலமுண்டாகு மென்பது திண்ணம்.!!

தார்மிகர்கடமை!! தலைவர்களைவரவேற்று உபன்யாஸச்ரவணம் செய்வதே முதற்கடமை! அடுத்தபடியாக தர்மப்ரசாரம் செவ்வனே நடைபெற பணமுடிப்பளிப்பது இரண்டாவது கடமையாகும்!

வேறு வேலை இல்லையா? நம் நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் தேசக்ஷேமத்திற்கும் ஒற்றுமைக்கும் உரிய ஊழியத்தை விட்டு மறுபடியும் ஆலயப்ரவேச துஷ்ப்ரசாரத்திலிறங்குவது துரதிருஷ்டமாகும்!!

தைவம் நின்று கொல்கிறது!! நாஸ்திகத்தன்மை பூண்டு தேசத்தொண்டெனும் வியாஜத்தால் பல தைவாபசாரங்களைப் பலர் துணிந்து செய்கின்றனர். அவரவர் புண்யபாபங்களுக்கேற்றவாறு பலனைச் சிறிது தாமதமாக அனுபவிக்கின்றனர். பாக்கியுள்ளவர் விரைவில் அனுபவிப்பர். திருக்கோவிலூரில் இத்தகைய ஸம்பவம் ஒன்று நடந்ததாக வதந்தி.

தாமதிக்கக் கூடாது!! ஜர்மனி நாளுக்கு நாள் உலகைக்கபளீகரித்து வருகிறது. அமரிக்க தேசம் இனி ஓர் க்ஷணம் கூட தாமதிக்கலாகாது! உடனே எப்படியோ போரை நிறுத்தவேண்டும். அதற்கு முன் வராவிடில் பேராபத்தே!!

புதிய இந்தியா மந்திரி என்செய்வர்? புதிய இந்தியா மந்திரியின் பழய பேச்சுகளை இப்போது விரிவாக் எடுத்துக்காட்டி பலர் அவரிடம் பெரிதும் எதையோ எதிர்பார்க்கின்றனர். எப்படியாயினும் அவர் வெள்ளையர்! அஸ்வதந்த்ரர் !! பேச்சில் ஏமாறுதல் கூடாது!!

நம்மை முதலில் திருத்துக!! காங்கரஸ் முதலில் ஸகல கொள்கையுடையவர்களையும் ஒன்று சேர்த்து தர்மத்தில் கை வைக்காமல் இருந்தால் எவரையும் நாம் எதிர்பாராமல் ஸ்வராஜ்யத்தையுமடைவோம்!!

சுற்றுப் ரயாணம்!! அ. க. வி. ஸபையார் மூன்றுவது வகுப்பு சத்தத்தை அபேக்ஷித்த நிமித்தம் பல இடங்களிலிருந்து அழைப்பில்லை! என்னுலும் விழுப்புரம் கடலூர் திருவாலூர் செம்மங்குடி வடயல்கருப்பூர் திருவிடமருதூர் குன்னம் அன்னையூர் திருக்கோவிலூர் முதலியவிடங்களில் தர்மப்ரசாரம் நடைபெற்றது. நாளை திருக்கோவிலூர் உபன்யாஸம் பூர்த்தியாகி வடயல் கருப்பூரில் 10 நாள் தர்மப்ரசாரம் நடைபெறும்!!

காரைக்குடி

தர்ம உண்டியல்

குன்னக்குடி கவுரவ நியாயாதிபதி ஸ்ரீ வீ. சிவருமய்யர் இவ்விடத்தில் வந்திருந்து ஷை சங்கத்திற்கு மஹான்யாஸ புரஸ்ஸரத்துடன் ஏகாதசருத்திறம் உபநிஷத் பிரும்மஞேத்தமர்களால் செய்யப்பட்டு ஷை யார் வழக்கம் போல் போட்டு வருகிற தர்ம உண்டியலை கண்ட்றமாணிக்கம் ஸ்ரீ மெ- கி- பெறா. சோமசுந்திரம் செட்டியார் அவர்களால் உடைக்கப் பட்டு உண்டியில் ரூ 358—11—0 இருந்ததும் தர்ம விநியோகம் செய்தது போக பாக்கி இருப்பு ரூ 9—8—0 யும் உண்டியில் சேர்க்கப்பட்டது. இதுபோல் ஒவ்வொரு கிருகத்திலும் போட்டு வந்து ஆசார்யாள் கிருபைக்கு பாத்திறமாக வேணுமாய் பிரார்த்தித்து மங்கள கானத்துடன் வைபவம் முற்று பெற்றது. (எ-நி)

டாக்டர் நடராஜ சாஸ்திரீ
ஆயுர்வேதாசார்ய அவர்களின்
ப ய ஸ் ய ா
பால் கோடுக்கும் ஸ்திரீகளுக்கு ஓர்
வரப்பிரஸாதம் போன்றது.
1 பாட்டில் விலை ரூ. 2—4—0.
'ஆர்யதர்மம்' வாசகர்களுக்கு 5% தள்ளுபடி.
" ஆத்ரேய "
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிநப்பள்ளி.

துகிலியில் சங்கர ஜயந்தி.

சென்ற 3—5—40 முதல் 12—5—40 வரை துகிலி ஆர்யவித்யா பிரபோதினி ஸம்ஸ்கிருத பாடசாலை மானேஜர் எஸ் ராமரெங்க சாஸ்திரிகள் அவர்களுடைய கிருஹத்தில் ஷை பாடசாலை உபாத்தியார் K. S. வெங்கிட்டராம சாஸ்திரிகள் அவர்களாலும் கஞ்சனூர் மாகாண ஆஸ்திக பக்த ஜனங்களாலும் ஸ்ரீ குரு சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் விமரிசையாக இனிது நடைபெற்றது.

பிரதினம் காலையில் உபநிஷத்பாராயணங்களும் லக்ஷார்ச்சனைகளும் கடைசி தினமாகிய ஜயந்தியன்று பிராம்ஹண சந்தர்பணையும் இரவு ஆசார்யாளுடைய திருவுருவப் படத்தின் திருவுலாக்காக்ஷியும் பாண்டு முதலிய வாத்திய விசேஷங்களுடன் வேத கோஷங்களுடனும் பஜனை கோஷ்டியுடனும் நடைபெற்றன. அவ்வமயம் பலபக்த சிகாமணிகள் கண்ணுற்று அளவற்ற ஆனந்தமடைந்தார்கள். ஒ. நி.

நன்னிலம்.

விக்ரம-ஹு சித்திரை மீ 30உ(13-5-40 பஞ்சமி யன்று ஷை யூர் மேல அக்ரஹாரம் சாம்பசிவ அய்யரவர்கள் கிருஹத்தில் ஷை விழா கொண்டாடப் பட்டது. ஸ்ரீமதாதி சங்கராசார்யாளுடையவும் ஆதுனிக பகவத் பாதாளுடையவும் ப்ரதிக்ருதி களுக்கு பூஜை முதலியன செய்து இரவு 8 மணிக்கு ஸ்ரீவாஞ்சியம் பாரத சாஸ்திரிகள் அவர்களால் "குருபக்தியும் மனீஷாபஞ்சகமும்" என்ற விஷயம் உபன்யஸிக்கப் பட்டது.

சிரோம்ணி டி. எஸ். வைத்யநாத சாஸ்திரிகளவர்களாலும் உள்ளூர் ரிடையர்டு டீச்சர் என். எஸ். ராமச்சந்திரய்யர் அவர்களாலும் ஆசார்யாளின் அவதார ப்ரயோஜனம் அவர்களின் பாஷ்யங்கள் உபதேசரூபமான காவ்யங்கள் \ அதிலும் முக்கியமாக பஜகோவிந்தம், தக்ஷிணா மூர்த்தி அஷ்டகம் இவ்விரண்டையும் எல்லோரும் பொருளறிந்து மனப் பாடஞ்செய்தல் அவசியம் என்றும் வற்புறுத்தி இப்பொழுது விளங்கும் ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களின் மஹிமையை விசேஷமாகக் கொண்டாடி சந்தன தாம்பூலாதி விநியோகங்களுடன் இரவு 10 மணிக்கு பூர்த்தி செய்யப்பட்டது. எல்லோரும் வந்து தரிசித்து ச்ரவணம் செய்து கிருதார்த்தரானர்கள்.

ந. சே. இராமசந்திரய்யர்,

ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்

கும்பகோணம்.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாள் ஜெயந்தியாகிய 12—5—40 என் வீட்டில் ஆராதனை அர்ச்சனை நடத்தப்பட்டது.

ஆக்ஞை பிரகாரம் 17-5-40 வெள்ளிக்கிழமை ஏகாதசியை முன்னிட்டு ஷை அக்கிரஹாரம் ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் மெலட்டூர் பிர்ம-ஸ்ரீ ரெகுநாத சாஸ்திரிகள் அவர்கள் மாலை 6½ மணிமுதல் குசேல உபாக்யானம் நடத்தினார். சென்ற ஏகாதசியன்று கிடைத்த கோகிருதம் சுமார் சேர் 1 ஸ்ரீ மடத்தில் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது.

எஸ். சுப்பிரமணிய அய்யர்,
ஸ்ரீமடம் முத்திராதிகாரி.

விக்கிரம ௵ சித்திரை ௴ 30௳ ஞாயிற்றுக்கிழமை சோலையப்ப முதலியார் அக்கிரஹாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தில் காலை 8 மணிக்கு ஷை சங்க நிர்வாகிகளாலும் ஷை அக்கிரஹார வாசிகளாலும் கீதா பாஷ்ய பாடம் படிக்கிறவர்களாலும் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவமானது விமர்சையாகக் கொண்டாடப்பட்டது அது சமயம்வேதாந்தசிரோமணி ஸ்ரீ கே. ரெகுநாத சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ ஆசார்யாளின் அவதாரமஹிமையைப் பற்றி ஓர் அரிய உபன்யாஸம் செய்தார்கள் பிறகு பானக பூஜை செய்யப்பட்டு வைபவம நடந்தேறியது.

டி. வி. நாகராஜ சாஸ்திரி
காரியதரிசி

சித்திரை ௴ 30௳ ஞாயிற்றுக்கிழமை மஹாமகக்குளம் ஸ்ரீ விசுவநாத ஸ்வாமி ஆலயத்தில் 4மணிக்குஸ்ரீமதாசார்யாளின் ஆராதனையும் அர்ச்சனைகளையும் பக்தி சிரத்தையுடன் நடத்தி, பிறகுகல்லூர் வெங்கிட்டராமய்யர் ஆசார்யாளின் மகிமையைக் குறித்தும் ஷை அக்ரகாரத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் பிராம்மண ஸபா விஷயத்தைக் குறித்தும் முகவுரையாக சொற்பொழி வாற்றினதும் திருவிசநல்லூர் ஸ்ரீ வைத்தினாத சாஸ்திரியவர்களால் சங்கருடைய அவதாரம் முதல் அவாள் திக்விஜயம் முடிய தெளிவாக தெரிவித்ததோடு பிராமண்யம் தற்சமயம் இருக்கும் நிலைமையையும், இனி அது அபிவிர்த்தியடைய நடத்திவரும் கார்யங்களையும், பிரயாஸையையும் விரிவாக எடுத்துரைத்தது உபன்யாஸத்தை முடித்துக் கொண்டார்கள்.

ஷை உபந்யாஸத்திற்கு அக்ரஹாரதிலுள்ள சிஷ்ய கோடிகளும் ஸ்திரீகளும் குழந்தைகளுமாக ஏராளமாக கூடியிருந்தார்கள்.

உபந்யாஸம் முடிந்ததும் சாஸ்திரியார்களுக்கும் கூட இருந்தவர்களுக்கும் சந்தண தாம்பூலம் ஸம்பாவனைகள் செய்ததும் வந்திருந்த மஹா ஜனங்கள் எல்லோருக்கும் பானக பூஜையும் விமர்சையாக நடத்தப்பட்டது. நிற்க; சித்திரை ௴ கிருஷ்ண பக்ஷத்துவாதசி ஸமயம் வசூலித்வ, பசுவின் நெய்யையும், சித்திரை ௴ த்து நாம அக்ஷதை முடிச்சுகளையும் ஸ்ரீ மடத்தில் சேர்ப்பிக்கப்பட்டது.

என்.எஸ். ராஜப்பய்யர்
ஸ்ரீமடம் முத்ராதிகாரி

பண்ணுருட்டி

பிரதி வருஷம் போல் இவ்வருஷமும் 12—5—40க்குச் சரியான நாளது விக்ரம வருஷம், சித்திரை மாதம், 30-ம் தேதி, பானுவாரம் புனர்வசு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் அன்றுதினம் பிரும்மஸ்ரீ சாம்பமூர்த்தி கனபாடிகள் அவர்கள் கிருஹத்தில் மேற்படியாரால் ஆஸ்திக பக்த ஜனங்களுடைய திரவிய சஹாயத்தைக் கொண்டும் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் அதி விமரிசையாய் நடத்தப்பட்டது.

பகலில் மஹன்யாஸ பூர்வகம், ஏகாதச ருத்ரஜபம், உபநிஷத்து, வேதபாராயணம், பஜனை கோஷ்டி ஸஹிதம் ஸ்ரீ மஹா பூஜையும், பிராம்மண சந்தர்ப்பனையும், ஏழைகளுக்கு சாப்பாடும், சாயங்காலம் ஸ்ரீ சங்கரர் அவதார மஹிமையைப்பற்றி உபன்யாஸமும், லலிதா ஸஹஸ்ர நாமம் அர்ச்சனையும், பானக பூஜை பஜனைகள் முதலிய வைபவங்களும் நட.ந்த பிறகு எல்லோருக்கும் பிரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டு இவ்வருஷம் 11வது வருஷத்திய ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் நிர்விக்னமாய் நடந்தேறியது.

சாம்பமூர்த்தி கனபாடிகள்

அரியலூர்

அரியலூரில் ஸ்ரீ பரமாசார்யாளின் ஜயந்தி உத்ஸவம் 10—5—40ல் ஆரம்பிக்கப்பட்டு பிரதிதினம் சாயங்காலமும் ராத்திரியிலும் பிர்ம்மஸ்ரீ வரகூர் வி.எஸ் சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் உபந்நியாஸங்களும் 12௳ யன்று, மஹந்நியாஸ புரஸ்ஸரமாய் பூஜையும் பிராம்மண ஸந்தர்ப்பணமும் சாயங்காலம் கிராமபிரதக்ஷிணமும் அரியலூர் கிராமவாஸிகளால் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டது. (ந-நி)

சீர்காழி

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்களது ஆஞ்கையின்படி பிரதிஏகாதசியிலும் ரிடயர்ட் போஸ்டு மாஸ்டர் பிர்ம்மஸ்ரீ டி. கல்யாண ராமய்யரவர்கள் கிரகத்தில், ஸ்ரீமத் பகவத்கீதோபந்யாசக பிர்ம்மஸ்ரீ ரா- சுப்பிரமணிய்யர் அவர்களால் நடந்துவரும ஸ்ரீ சங்கரசரிதோபன்யாசத்தில், சென்ற 3. 5. 40ல் வந்த ஏகாதசியன்று ஸ்ரீ. சிவகுரு, ஆர்யாம்பாள் விவாக மகோற்சவ சரிதமும், நேற்று ஸ்ரீ சங்கரஜயந்தியானதினல் ஸ்ரீசங்கரர் அவதார கட்ட சரிதமும் உபன்யஸிக்கப்பட்டது. ஆசார்ய பக்தர்களாகிய அனேகம் ஆஸ்திகரத்னங்கள் வந்திருந்து சிரவணம் செய்தார்கள். உபந்யாசமானது சர்க்கரைப்பந்தலில், தேன்மாரி பொழிந்ததேபோல், நவரசங்களும் பொருந்தி கேட்போர்களின் மனங்கள் பரவசமடையும்படி செய்தது 1—6—40 ஏகாதசி இரவு7-½ மணிக்கு மேல் ஸ்ரீசங்கரர் லீலைகள். தேவர்கள் அவதாரம், மண்டனமிச்ரர் ஸரஸவாணி திருக்கல்யாணம் இவைகள் உபன்யசிக்கப்படும். (ந-நி)

மணக்கால்

சென்ற வருஷங்கள் போல் அல்லாமல் இவ்வருஷம் ஆசார்ய ஜயந்தி உற்சவம் இவ்வூர் சிவன் கோவில் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தினந்தோரும் குருமூர்த்திக்கு அபிஷேக அர்ச்சனாதிகளும் தைத்ரீய கிருஷ்ண யஜுர் வேதசம்ஹிதா பாராயணம், விஷ்ணு ஸஹஸ்ரநாம கீதா பாராயணங்களும் நடந்து ஜயந்தி அன்று காலை பிரும்மஸ்ரீ பொம்மல் பாளையம் ராஜகோபால கனபாடிகள் அவர்களால் "சங்கர விஜய விலாஸ" உபந்நியாசமும் நடந்த பின் உபநிஷத் பாராயணம், பஜனையுடன் ஆசாரியாள் பட்டணப்ரவேசமும் வெகுகுதுகலத்துடன் நடந்தேறியது. ஷை உத்ஸவத்தில் மணக்கால் பிரும்மஸ்ரீ எம். வி. சுந்தரேச தீக்ஷிதர் அவர்களின் சிரத்தை மிகவும் பாராட்டத்தக்கது.

எம். வைத்தீஸ்வரன்

மேல் மங்கலம்

வழக்கம் போல் இவ்வருஷமும் சித்திரை மாதம் 26-ம்௳ புதன்கிழமை முதல் 30௳ ஞாயற்றுக்கிழமைவரை ஐந்து தினங்களிலும் ஸ்ரீ மதாசார்யாளுக்கு காலையிலும் மாலையிலும் பூஜை. ஸஹஸ்ரநாமார்ச்சனாதி வைபவங்களும். மஹன்யாஸ பூர்வமாக ஏகாதசருத்ராபிஷேகமும் வேத பாராயணம் கீதா தசோபநிஷத்ப்ரம்மஸூத்ராதி பாஷ்ய பாராயணங்களும் பிராம்மண ஸந்தர்பணையும் இரவில் பிரும்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகளால் பகவத் பாதாளின் திவ்ய சரித்திர உபன்யாஸமும் விமரிசையாக நடைபெற்றது. சித்திரை ௴ 30 ம்௳ ஜயந்திதினம் விசேஷ பூஜை ஆராதனைகளுடன் மாலை 5 மணிக்கு ஸ்ரீ மதாசார்யாள் படத்தை புஷ்பச்சப்பரத்தில் அலங்கரித்து உபநிஷத்கோஷத்துடனும் வாத்யகோஷங்களுடனும் ஊர்வலம் வந்து உபன்யாசத்துடனும் பானக பூஜையுடனும் உத்ஸவம் பூர்ணமானது. மஹாஜனங்கள் ஐந்து தினங்களிலும் விசேஷசிரத்தை எடுத்துக் கொண்டனர்.

நாளது வைகாசி ௴ 10, 11, 12 ம்௳ களில் இவ்வூர் சபையின் மூன்றுவது வார்ஷிகோத்ஸவம் நடைபெறும். ஆஸ்திகர்கள் விஜயம் செய்து சிறப்பிக்க வேண்டுமாய் கோருகிறோம். (நநி-)

இலந்துறை

இலந்துறை பெரிய கோவிலில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு ஸ்ரீ சங்கர ஜயந்தி புண்ய காலத்தை முன்னிட்டு (12—5—40)௳ பானுவாரம் காலையில் ஜப பாராயணங்களுடன் இவ்வூர் "ஸமரஸ குடீரம்" பிரம்மஸ்ரீ சிவாசார்ய, கங்கா ஜடேச சர்மா அவர்களால் விசேஷ அபிஷேக பூஜாதிகளும் அர்ச்சனையும் நன்கு நடைபெற்றன.

"ஆரியன் எலிமெண்டரி" பாடசாலையிலும் அதன் மானேஜரும் மாஜி ஹெட்மாஸ்டருமான ஸ்ரீமான் எ. கே. ஸதாசிவ ஐயர் அவர்களால் தண்டந்தோட்டம், நடார், விளங்குடி முதலிய இடங்களிலிருந்து வந்திருந்த பாகவத கோஷ்டியுடன் காலையில் பாகவத ஸம்பரதாயப்படி உஞ்சவ்ருத்தியும் பிறகு ஸ்ரீ ஆதி ஸ்ரீ பரமாசார்யாளுடையவும், தற்காலம் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கிக் கொண்டிருக்கிற ஸ்ரீ ஆசார்யாளுடையவும் படங்களுக்கு உத்ஸவஸம்ப்ரதாயப்படி பூஜை அலங்காரம் பஜனைமுதலியனவும் மிகுந்த பக்திசிரத்தையுடன் ப்ராம்மண ஸந்தர்ப்பணையும் நன்கு நடைபெற்றது.

"ஓர் பக்தன்"

ஸ்ரீ ஆதி சங்கரபகவத் பாதாள் மஹிமை.

ஜகத்குரு ஸ்ரீஸ்வாமிகள் உபந்நியாஸம்.

கும்பகோணம், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீஆசாரிய ஸ்வாமிகள் கீழவடயல் கருப்பூர் கிராமத்தில் செய்தருளிய பிரஸங்கமாவது:—

இன்று சங்கர ஜயந்தி. பரமேசுவரன் கேரள தேசத்தில் சசலக் கிராமத்தில் வைகாசி மீ சுக்லபக்ஷம் பஞ்சமி திதியில் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர் அவர்களாக அவதாரம் செய்தார்கள். சங்கர என்னும் பதத்தினலேயே ஷை வருஷம், மாதம், தேதி சூசிதமாகிறது. கடபயாதி சங்கியாப் பிரகாரம் சங்கர என்னும் பதத்தினல் 512 என்னும் எண் கிடைக்கிறது அதே எண் अंकानां वामतोगतिः என்ற பிரகாரம் 215 ஆகிறது. இதனல் இரண்டாவது-மீ முதல் பக்ஷம் 5வது திதி அதாவது வைசாக மாதம், சுக்லபக்ஷம், பஞ்சமிதிதி (சாந்திரமானப்பிரகாரம்) என்று சூசிதமாகிறது.

ஸ்ரீ ஆசார்யாள் சேது முதல், ஹிமாசலம் வரையில் சஞ்சாரம் செய்து அக்காலத்தில் பிரசாரத்திலிருந்த 72 துர்மதங்களை கண்டித்து ஷண் மதங்களை ஸ்தாபித்தார்கள். அதனல் தான் நாம் இன்றும் கோகுலாஷ்டமி, சிவராத்திரி, முதலிய புண்ய தினங்களை கொண்டாடும் பாக்யத்தைப் பெற்றிருக்கிறோம்

இல்லாவிட்டால் மேலே சொல்லப்பட்ட துர்மதங்களின் வ்யாப்தியினல் புண்ய தினங்களே நமக்குத்தெரியாமல் போயிருக்கும். ஆகையால் இவ்வளவு உபகாரம் செய்த ஆசார்யாளின் ஜயந்தியை (சங்கர ஜயந்தியை) நாம் எல்லோரும் கொண்டாட வேண்டும். முடியாவிட்டால் ஷை ஜயந்தி நடக்கும் இடத்திற்காவது போய் அங்கு நடக்கும் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ ஆசார்யாள் அவர்களின் அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாக வேண்டும்.

ஈச்வரனுக்கு அநேக பெயர்கள் உண்டு அவைகளில் சம்பு என்பது ஒன்று. சம்பு என்ருல் சுகத்திற்கு உற்பத்தி என்று அர்த்தம்.

“ नमः शम्भवे च मयो भुवेच नमः शङ्कराय च मयस्कराय च ” श्रीरुद्रं

சுகத்திற்கு உற்பத்தி ஸ்தானமாக மட்டும் இருந்தால் போதாது. சுகத்தை எல்லோருக்கும் போட்டவேண்டும் என்றும் கருணையினல் பரமேச்வரன், சங்கரராய் அதாவது எல்லோருக்கும் சுகத்தைச் செய்கிறவராய் அவதாரம் செய்தார்.

नमः कपर्दिनेच व्युप्तकेशाय च என்று ஸ்ரீருத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்யத்திற்கு சடை உடையவரும், க்ஷௌரம் செய்யப்பட்ட கேசங்களை உடையவரும் என்று அர்த்தம். இதில் व्युप्तकेशाय என்னும் பெயர் ஸ்ரீ ஆசார்யாளையே குறிக்கிறது. வேறு அவதாரம் ஒன்றும் வ்யுப்தகேசராயில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒரு மாதா, பிதாக்கள் உண்டு. எல்லோருக்கும் பார்வதியும் பரமசிவனும் மாதா பிதாக்களாக விளங்குகிருர்கள். இதையே மஹா கவியாகிய காளிதாஸனும் “ जगतः पितरौ वन्दे पार्वती परमेश्वरौ ” என்று சொல்லியிருக்கிருர் அதுபோல நமக்குத் தனியாக ஒரு குரு இருந்தாலும் எல்லோருக்கும், பொதுவாய் குருவாயிருப்பவர் ஸ்ரீ சங்கராசார்யாள் அவர்களே.

குருவினுடைய கிருபையினல்தான் நமக்கு எல்லாவிதச்ரேயஸூம் உண்டாகும் ஆகையினல் எல்லோரும் குருத்யானம் செய்து, ஜபதபாதிகளைச் செய்வது ச்ரேயஸ்கரம்.

ஒருவன் நல்ல ஒளஷதங்களை பத்யத்துடன் சேவித்து வந்தால் ஆரோக்யத்தை அடைவான். அது போல் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களை நியமத்துடன் அனுஷ்டித்து வந்தால் மோக்ஷத்தை அடைவான். மோக்ஷ பலமானது ஈசுவரனுடைய இச்சாதீனம். ஈசுவரன் நமக்குச் செய்யும் உபகாரங்களில் இது மிகவும் பெரியது.

இப்பொழுது நமக்கு லோகத்தில் உள்ள வஸ்துக்கள் உண்மையான ஸ்வரூபத்துடன் தோன்றுகிறதில்லை. கல்லாகவும் குடமாகவும், தோன்றுவது மண் தான். இருந்தாலும் மண்தான் என்ற எண்ணம் பார்க்கும் பொழுது ஏற்படுவதில்லை. அது போல் பிரும்ம பூதமான இந்த ஜகத் வேறு வேறு ரூபமாகத் தோன்றுகிறது. ப்ரும்மமாகவே தோன்றுவது தான் உண்மை. அப்படித் தோன்றுவதற்கு அத்வைத ஞானம் ஏற்படவேண்டும். அந்த அத்வைத ஞானத்தால் தான் மோக்ஷத்தை அடையலாம். அப்பேர்ப்பட்ட அத்வைத ஞானத்தை நம் ஆசார்யாள் எங்கும் உபதேசம் செய்து, பேதபுத்தியினல் ஏற்படும் பயத்தை நீக்கி சர்வக்ஞபீடா ரோஹணம் செய்தார்கள். அப்பொழுது தாம்பிரபர்ணிவாஸிகளான சில பண்டிதர்கள் பிரத்தியக்ஷமாகக் காணப்படும் பேதத்தை எப்படி அபலாபம் செய்யலாமென்று வாதிக்க அவர்களுக்கு

“ सर्वं खल्विदं ब्रह्म ”

முதலிய உபநிஷத்வாக்கியங்களைக் கொண்டு அத்வைதம் தான் வேதத்தின் தாத்பர்யம் என்பதை நிரூபித்து பிறகு அந்தப் பண்டிதர்களால் வணங்கப்பெற்று தேவர்கள் புஷ்பமாரி பொழியசர்வக்ஞபீடா ரோஹணம் செய்தார்கள்.

எம். வாஞ்சிநாதன்
முடிகொண்டான்

அகரமாப்படுகை

சென்ற சித்திரை-மீ 30-உ ஞாயிறுக்கிழமை ஸ்ரீ சங்கர ஜெயந்தி மஹோத்ஸவமானது நன்ருக கொண்டாடப்பட்டது. அது விஷயத்தில் கிராமத்திலுள்ள பக்தர்களை கூட்டியும் பூஜைக்காக வேண்டிய சாதனதிரவியங்களைச் சேர்த்து கொடுத்ததிலும் ஸ்ரீ மடம் முத்ராதிகாரியான வி. சீனிவாசய்யருடைய குருபக்தி விசேஷமானது மிகவும் பிரகாசித்தது ஸ்ரீ சங்கருடைய பூஜா அவதானத்தில் ஷை யூர் பிரும்மஸ்ரீ சீனிவாச சர்மாவென்ற பண்டிதரால், பரமகாருணிகனை பரமசிவன் லோக அனுக்கிரஹார்த்தம் கேரள தேசத்தில் சிவபக்தர்களான சிவகுரு ஆர்யாம்பாள் என்கிற பிராமணர்களுக்கு புத்ரரூபமாக அவதரித்தார் என்கிற மங்கள சரித்திரமும் கலியில் மோக்ஷமென்கிற புருஷார்த்தத்தை அடைய அநேக வழிகாட்டி வருகிறதாயும் ஸ்ரீமத் பகவத் பாதாள் அவர்களினல் செய்யப்பட்டதுகளுமான அநேக பிரகர்ணங்களில் ஒன்ருகிய ஸோபான பஞ்சகத்திலுள்ள 2 வது, ஸ்லோகத்தை ஆரம்பித்து சகலருக்கும் அந்த ஸ்லோகத்தின் அர்த்தங்கள் பூராவும் உபன்யாசம் செய்யப்பட்டும் கடைசியாக ஸாதுஸங்கமே மோக்ஷத்திற்கு முக்ய காரணமென்று அழகாய் சொல்லி நடந்தேறியது. பிறகு குருவந்தனங்கள் செய்து சந்தன, தாம்பூலம், பானகபூஜை முதலானதுகள் வழங்கப்பட்டது.

இப்படிக்கு
எ. கிருஷ்ணமூர்த்தி அய்யர்

ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்

சீர்காழி

ரிடயர்ட் போஸ்ட் மாஸ்டர் பிர்ம்மஸ்ரீ டி. கல்யாணராம அய்யர் அவர்கள் கிரகத்தில் இரவு 6-¼மணிமுதல் 7-¼மணி வரையில், ஸ்ரீ ஆதிசங்கரரின் அழகியபடத்திற்கு திவ்யாலங்காரம்செய்து, வாத்யகோஷத்துடன், உபநிஷத் பாராயணத்துடனும் கும்பகோணம் ஸ்ரீமடத்திலிருந்து வந்த ஸ்ரீசங்கரா குரு பூஜாக்கிரமபடி யதோக்தமாய் பூஜை நடந்து,சந்தனம், விடயம் பழங்கள் சுண்டல் முதலிய பகவத் பிரசாதங்கள் விநியோகம் நடைபெற்றது. ஸ்ரீமடம் முத்திராதிகாரியவர்கள் பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்கள் முதலிய அனேகம் பிரமுகர்கள் அச்சமயம் வந்திருந்தார்கள் அதன் பின்னர் இரவு7-½ மணியிலிருந்து 9மணிவரையில்ஸ்ரீசங்கர அவதார கட்டம் உபன்யாஸம் நடைபெற்றது. ஒ.கி.

மிலட்டூர்

மிலட்டூர் ஸ்ரீ சிவப்ரியா விலாஸ ஸமஸ்கிருத வித்தியாசாலையில் 12—5—40 காலை 10மணி, முதல் 12மணி வரையில் ஸ்ரீ ஆதி சங்கராசாரியாள் அவாளுடைய படத்திற்கு ஷோடசோபசார பூஜை நடைபெற்றது. மாலை 3 மணி முதல் 5மணி வரையில் ஷை வித்தியா சாலையின் தலைமை உபாத்தியாயர் பிர்ம்மஸ்ரீ எம். சுந்தரேச சாஸ்திரிகள் ஆதிசங்கராசார்யாளின் சரித்திரத்தின் சாரத்தையும் அத்வைத ரகஸ்யத்தையும் கூறி தற்காலம் விஜய யாத்திரைசெய்து சிஷ்யகோடிகளுக்கு ஞானேபதேசம் செய்துவரும் காமகோடி பீடாதிபதி அவர்கள் ஆதி ஆசார்யாளின் மறுஅவதாரம் என்பதை பலகாரணங்களால் எல்லோருக்கும் மனதில் படியும்படி உபன்யஸித்தார்கள், பிறகு எல்லோருக்கும் ஆசார்ய ப்ரஸாதம் கொடுத்து ஷை கொண்டாட்டம் இனிது நிறைவேறிற்று.

ஆர். சீதாராம சர்மா
மிலட்டூர்

காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு
ஸ்ரீ சங்ராசார்ய ஸ்வாமிகள்
அருளிய நன்மொழிகள்
முதல் பாகம் ரூ. 1—8—0
இரண்டாம் பாகம் அணு 10.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்
நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணு 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணு 0—4—0.
தபால் செலவு அணு 1
கிடைக்குமிடம்.— ஸ்ரீஜனர்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடேட், கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஞு வைகாசி-மீ 3உ

ஸ்ரீ ஆதி சங்கரரைப்பற்றிய படக்காக்ஷி

நமது பாரத தேசத்திற்கு ஏற்பட்ட நவீன காலத் தீங்குகளில் ஸினிமா படக்காக்ஷியும் ஒன்று. இதனால் ஏற்பட்டவரும் தீமையானது இப்போது எல்லைகடந்து விட்டது. ஜனங்களின் ஸன்மார்க்கத்தையும், ஒழுக்கத்தையும் ஸினிமா கெடுத்து வருவது பிரத்யக்ஷம். ஸினிமா விஷயமாக டப்ளின் நகரத்தில் ஒரு மேதாவி சில மாதங்களுக்கு முன் வெளியிட்ட கண்டனமாவது :—

"உலகமக்களின் ஸன்மார்க்கத்தை ஸினிமா பாழாக்கி வருகிறது. இது ஜனங்களின் ஒழுக்கத்தைக் கெடுக்க வந்த ஒரு சாபக்கேடாகும். ஆனால் பொதுமக்களுக்கு இது தெரிவதில்லை. மனக்களிப்புடன் அவர்கள் இதில் ஈடுபடுகிறார்கள். உலக நாகரிகமே நாசமடைந்ததற்குக் காரணமான துர்மார்க்க லீலைகளைப் போற்றிப் பின்பற்றுகிறோமென்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படவில்லை.

இருநூறு வருஷங்களாக இருந்து வந்த கொடிய சட்டங்களைவிட இருபது வருஷங்களில் இந்த ஸினிமாவால் ஏற்பட்ட தீமை வெகு அதிகம். சினிமா தணிக்கை போர்டுகளால் ஒரு பைசா கூட பிரயோஜனமில்லை. ஸர்க்கார் அவைகளை எடுத்து விடலாம்,,

இவர் சொல்லியுள்ள ஒவ்வொரு வார்த்தையும் உண்மை நிறைந்தது. ஸினிமாக்களால் ஏற்பட்டு வரும் அனர்த்தங்களை பற்றி நம்தேச ஜனங்கள் கவலைப்படக்காணோம்.

பெரும்பாலும் ஸினிமாவைப் பார்க்க பாமர ஜனங்களே அதிகம் போகிறார்கள் பட முதலாளிகள் இந்தப் பாமரர்களைத் திருப்தி பண்ணிவைக்கவும், வஞ்சித்து வசப்படுத்தவுமே முயற்சிக்கிறார்கள். ஸினிமா நடிகர்களை அருவருக்கத்தக்க முறையில் நடிக்கச்செய்து அதைப் படம் பிடித்துப் பாமரரைப் பாழக்கிவருகிறார்கள் இந்த அபாயம் அதிகரித்து விட்டதைப் பற்றி ஆஸ்திகர்கள் கவலையடைந்து நிற்கையில் ஸினிமாவின் தீங்கு, நமது தெய்வங்கள் ஆசார்யர்கள், போன்ற புனித ஸ்தலங்களிலும் பரவி விட்டதை இப்போது காண்கிறோம். நமது பரிசுத்தமான புராணக் கதைகளையும் ஆபாஸமான வழியில் மனம் போனபடியெல்லாம் பாழாக்கி நமது மத கௌரவமே கேவலமாக மதிக்கப்படும் கதிக்கு கொண்டுவரப்பட்டு விட்டது. இத்துடன் ஸ்ரீ சங்கரர், ராமானுஜர் போன்ற ஜகதாசார்ய சிரேஷ்டர்களின் பரிசுத்தமான சரித்திரத்தையும் இப்பாவிகள் நாசமாக்க முற்பட்டிருப்பதை கோடிக்கணககான அவ்வாசார்யர்களின் சிஷ்யர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு வாளாவிருப்பது தர்மமா? சில காலத்திற்கு முன் சில விஷமிகள் ஸ்ரீ ராமானுஜரின் சரித்திரத்தை விஷமமாகப் படமெடுக்க முயற்சி செய்கையிலேயே நாம் அதை பலமாகக் கண்டித்து ஆசார்ய பக்தர்களைத் தூண்டிவிட்டோம்.

இப்போது அந்த விஷமிகள் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாளைப்பற்றி வெகு கேவலமாகத் தயாரித்துக் காட்டிவரும் படக்காக்ஷியைப் பற்றி பிரபல ஆசார்ய பீடங்களிலும் சிஷ்யர்களிடத்தும் பெருத்த வருத்தமும் ஆத்திரமும் உண்டாகி அக்காக்ஷியைத் தடுக்கும் வழிதேடப்பட்டு வருகிறது. அந்தப் படக்காக்ஷியைத் தயார் செய்தவர்கள், ஸ்ரீ பகவத் பாதாளின் ஈச்வராம்சத்வத்தையோ, அவாளுடைய வாசமகோசரமாகிய மஹிமைகளையோ, பாரத தேசத்திற்கு அவாளால் உண்டான க்ஷேமங்களையோ, வேறு எந்த கௌரவத்தையுமோ லக்ஷ்யம் செய்யாமல், வெகு கேவலமான வழியில் பொய்க்கதைகளைக் கற்பித்து பெரும் நரகக்குழிக்கு நாற்றாங்காலாகி விட்டார்கள். பாரத தேச மக்களனைவராலும் தெய்வாம்சமாகப் போற்றப்பட்டு வரும் ஆசார்ய சிரேஷ்டரைப் பற்றி இப்படிப் படமெடுத்ததற்கு நம்மில் ஒற்றுமையும் பௌருஷமும் இல்லாததே முக்ய காரணமாகும். மற்ற மதங்களில் இப்படி நடந்திருந்தால் தேசம் என்ன பாடுபடும்? மஹம்மதியர், கிறிஸ்தவர் போன்ற மதஸ்தர்கள், தாங்கள் புனிதமாகக்கருதும் விஷயங்களை ஸினிமாவில் சந்திக்கிழுப்பதற்கு இடம் கொடுக்கவில்லை. அப்பர் படக்காக்ஷி விஷயமாக ஜைன மதஸ்தர்கள் செய்த கிளர்ச்சி தெரிந்ததே.

தற்கால ஸினிமாக்காரர்கள், பிராம்மணர்கள், அவர்களுடைய ஆசார அநுஷ்டானங்கள், குல ஸ்திரீகள், குடும்பப் பழக்க வழக்கங்கள் முதலானவைகளை பரிஹஸிக்கும் நோக்கத்துடனேயே படம் பிடிக்கிறார். மேலும், தீண்டாமை விலக்குப்போன்ற ஆசாரத் திருத்தங்களை உபயோகிக்கிறார்கள். ஆகவே இதில் நாம் அவஸரமாகச் செய்யவேண்டிய வேலை என்ன? அதை அடுத்த ஸஞ்சிகையிய் குறிப்பிடுவோம்.

குடந்தையில் ஆலயப் பிரவேச கண்டனம்

ஸ்ரீ நடேசய்யர் விஜயம்.

அகில இந்தியவர்ணாச்ரம ஸ்வராஜய ஸங்கத்தலைவரான ராவ்ஸாஹிப் ஸ்ரீநடேசய்யர் அவர்கள் தமது பிரசாரகோஷ்டியுடன் 20உ குடந்தைக்கு விஜயமானார். அன்று மாலை 6 மணிக்கு போர்டர்டவுன் ஹாலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமாக பொது ஜனங்களும், நகர பிரமுகர்களும் கூடியிருந்தனர். ஸ்ரீ நடேசய்யரவர்கள் மதுரை ஆலயப் பிரவேச சரித்திரத்தை ஞாபகப் படுத்தியும் ஸப்கோர்ட்டில் நடந்து வரும் கேஸின் நிலைமையை தெளிவுபடுத்தியும், நாம் கட்டுப்பாடாக பிரசாரம் நடத்தி வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கத்தை வலுப்படுத்த வேண்டியும், ஹிந்து ஸபையின் போக்கைக் கண்டித்தும், இனிவரும் எலெக்ஷனில், காங்கிரஸ் முதலானவைகளை ஆதரிக்கூடாதென்றும் விவரமாகப் பேசினார்.

திருப்புகழ் ஸ்ரீ செல்லையா பிள்ளையவர்களும் பல மேற்கோள்களுடன் பிரஸங்கிக்கையில் ஆலயபிரவேசத்தைக் கண்டித்தும், ஸனாதந தர்மத்தை விருத்தி செய்ய வேண்டியும் வெகுஉருக்கமாகப்பேசினார்.

ஸனாதன தர்மவித்யாசாலை மாணவனாலும் ஒரு மாணவியாலும், சாரதாச்சட்டம் முதலியவைகளைக் கண்டித்து ரஸமாகப் பேசப்பட்டபின், ஸ்ரீமான் நடராஜ சாஸ்திரியாரால் தலைவரும் ஹால்கமிட்டியாருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

ந. நி.

கும்பகோணம்

கும்பகோணம் மேல மேட்டுத் தெரு அக்ரஹாரம் ஸ்ரீசெங்கழனீர் விநாயகர் ஆலயத்தில் 12—5—40 ஞாயிற்றுக் கிழமை தினம் ஸ்ரீசங்கர ஜயந்தி மஹோத்ஸவம் சனாதன தர்ம பாடசாலையின் ஆதரவில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

காலை 9 மணிக்கு பூஜையும் மாலை 4 மணிக்கு பானகபூஜையும் மிலட்டூர் வேதாந்த சிரோமணி ஸ்ரீ ரெகுநாத சாஸ்திரிகளால் ஸ்ரீசங்கர விஜயம் உபன்யாசம் நடைபெற்றது.

வைகாசி மீ 4 உ (17—5—40) வெள்ளிக்கிழமை தினம் வழக்கம்போல் ஷை ஆலயத்தில் ஸ்ரீசங்கர பகவத் பாதாசாரியாள் ஆக்ஞை பிரகாரம் ஏகாதசியை முன்னிட்டு மாலை 4 மணிக்கு ஸ்ரீ சபேச்வர சாஸ்திரிகளால் துருவ சரித்திரம் உபன்யாசிக்கப் பட்டது. ஆஸ்திகர்கள் வெகு திரளாக வந்து இருந்து கதாசிரவணம் செய்தார்கள்.

டி. ஜெ. கிருஷ்ணமூர்த்தி.

தஞ்சாவூர்

இவ்வருஷம் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவ வைபவமானது ஸ்ரீ ராமநாத ஜோஷி அவர்கள் முயற்சியினாலும் மற்றும் சில ஆஸ்தீக மஹாஜனங்களாலும் மேல ராஜ வீதி முகாஸா ஆபீஸ் கட்டடத்தில் ஷை உஸ்ஸவத்தை சித்திரை 26-உ (8—5—40) புதன்கிழமை முதல் பிரதிதினமும் காலையில் உஞ்சவிர்த்தியும் மாலையில் உபநிஷத் பாராயணங்களுடன் (10—5—40) வெள்ளிக்கிழமை யன்று சிமிழி பிர்மஸ்ரீ வெங்கிட்டராம சாஸ்திரியன் அவர்களால் ஸ்ரீ ஆசாரியாளுடைய பிரபாவ மகிமையைப்பற்றி உபந்யாஸமும் சித்திரை 30-உ (12-5.40) ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியாளுடைய படத்துக்கு ஸகஸ்ஸர நாம அர்ச்சனைகளுடன் பூஜைகளும் அன்று மத்தியானம் பிராமணர்களுக்கும் மற்றுமுள்ள இனத்தார்களுக்கும் ஸந்தர்ப்பணங்கள் நடந்ததோடு அன்று இரவு ஸ்ரீ ஆசார்யாளுடைய படத்தை அலங்கரித்து நூதன விமானத்தில் எழுந்தருளச் செய்து நான்கு ராஜவீதிகளிலும் ஸ்வஸ்த்திவாசனத்தோடும் திருவையாறு பிர்மஸ்ரீ நாகராஜ பாகவத கோஷ்டிகளால் பஜனைகளுடனும் ஊர்வலம் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

ஸ்ரீ மடம் முத்திராதிகாரி
டி. எஸ். வாஸுதேவ சாஸ்திரி

ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவம்,

கும்பகோணம்

கும்பகோணம் மேல அய்யங்தெரு எ. வைத்தியநாத அய்யர் கிரஹத்தில் மன்னார்குடி வேதமூர்த்தி பிர்ம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் அவர்களால் தினந்தோறும் நடந்து வரும் ராமாயண ப்ரவசனத்தில் நாளது ஸ்ரீ சங்கரஜயந்தி புண்ய காலத்தை உத்தேசித்து அன்றைய தினம் ராத்திரி 8மணி ஆரம்பித்து சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீபரமாசார்யாளுடைய அவதார கட்டத்தை உபன்யாஸம் செய்து பிறகு ஆசார்ய மகிமை என்னும் விஷயத்தை உபன்யாஸம்செய்தார்கள். அதில் ஸாரம்:— சதுர்வித புருஷார்தங்களுக்குள் மோக்ஷமே பரம புருஷார்தமென்றும் அதற்கு முக்ய ஸாதனம் ஞானமென்றும் அந்த ஞானத்தை அடைவதற்கு கர்மயோக பக்தி யோகத்தினால் சிறப்பு யேற்பட வேணுமென்றும் பிறகு அந்த ஞானமானது பரமாசார்யாளிடம் அவை பக்தியினால் ஏற்பட்டால்தான் மோக்ஷம் ஏற்படும் என்றும் ஆகையால் ஆசார்ய பக்தி அவசியம் வேணுமென்றும் ஆசார்ய அனுக்ரஹத்தால் ஸகல புருஷார்த்தமும் கிடைக்குமென்றும் கீதை பாகவதம் வேதம் முதலான ப்ரமாண வாக்யங்களுடன் ஜனங்களின் மனஸில் நன்ருய் பதிந்து பக்தி உண்டாகும்படி வெகு அழகாய் உபன்யாஸம் செய்தார்கள்.

பிறகு பெரியோர்களுக்கும் தனக்கும் பூர்ணமான ஆசார்ய பக்தி உண்டாக வேணுமென்று ஸ்ரீராகவனைப் பிரார்த்தித்து உபன்யாஸத்தை பூர்த்தி செய்தார்கள்.

ஸ்ரீ ராமபக்தர்கள்.

திருவானைக்காவல்

இவ்வூர் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடத்தில் வழக்கம்போல் ஸ்ரீ சங்கரஜயந்தி மகோத்ஸவம் உபநிஷத் ஸூத்ர பாஷ்யம் முதலிய பாரயாணங்களுடனும் மஹான்யாஸ புரஸ்ஸரமாக அபிஷேகாதி பூஜைகளுடனும் இரவில் அர்சனைகள் உபங்யாஸங்களுடனும் ஐந்தாவது நாள் விருதுகளுடன் ஊர்வலமும் வெகு விமரிசையாக நடந்தது.

இவ்வருஷ விசேஷம் ஸ்ரீ ஆசார்யாளுடைய பிம்பமொன்று ம்ருத்தில் செய்து பூஜா ஊர்வலங்கள் மனதைக் கவர்வதாக இருந்தது. பிம்பத்தை ஜாக்ரதையாக வைக்கப்பட்டிருக்கிறது. வித்யாஸ்தானம் செக்ரடரி ஸ்ரீ ஜயராமய்யரவர்கள் மிகுந்த சிரத்தையுடன் நடத்திவைத்தது மெச்சத்தக்கது.

திப்புராஜபுரம்

நமது ஸ்ரீ பகவத் பாதாள் ஜயந்திதினம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஆசார்யாளின் அனுக்ரஹ புரஸ்ஸரமாக ஆரம்பிக்கப்பட்டு, பூஜை, நைவேத்யங்கள் ஆனபிறகு ஸ்ரீ லக்ஷ்மிகாந்த சர்மா அவர்களால், சிவரஹஸ்யாந்தர்கத வரப்போகிற ஸ்ரீ ஆசார்யாளின் அவதாரப் பெருமையை சொல்லிவிட்டு, ஸ்ரீ சங்கர விஜயத்திலுள்ள ஸ்ரீ ஆதிபரமா சார்யாளின் திவ்ய ஜனன வைபவ கட்டம் வாசிக்கப்பட்டு பிறகு வெகு அழகாக உபன்யசிக்கப்பட்டது நமது ஸ்ரீ ஆசார்யாளால் அனுக்கிரஹிக்கப்பட்ட ப்ரஸாதமும் எல்லோருக்குக்கும் வழங்கப்பட்டது.

ந. கி.

சங்கர குருகுலம்

ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீ சங்கர குருகுலத்திலிருக்கும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாளுடைய ஜயந்தி மஹோத்ஸவம் சித்திரை-மீ 26உ (8—5—40) புதன்கிழமை முதல் ஆரம்பித்து சித்திரை-மீ (12—5—40) முடிய ஐந்து நாட்கள் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பிரதி தினமும் காலையில் மஹாந்யாஸ பூர்வகமாய் ஏகாதசருத்ராபிஷேகமும் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயணமும் சங்கர விஜய பாராயணமும் பிராம்மண சந்தர்பணமும் நடைபெற்றன. புதன்கிழமை சாயங்காலம் 4 மணிக்கு கீதோபந்யாஸசதுர வேதாந்தஸ்தாபக பிர்ம்மஸ்ரீ எஸ். வி. ஸுப்ரமண்ய சாஸ்திரிகளவர்கள் ஆசார்யாளின் மஹிமை என்னும் விஷயத்தைக் குறித்து மிகவும் அழகாய் உபன்யஸித்தார்கள். வியாழன், வெள்ளி 2 தினங்களிலும் காருகுறிச்சி பிர்ம்மஸ்ரீ ராமனதை சாஸ்திரிகள் "பக்தி" "பாகவத தாத்பர்யம்" என்னும் விஷயங் குறித்து உபன்யஸித்தார்கள். சனிக்கிழமை கிருஷ்ணராஜபுரம் ராமமூர்த்தி சாஸ்திரிகள் ஆசார்ய மண்டன மிச்ர ஸம்வாதம், என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தார்கள். பிரதி தினமும் இரவு ஸங்கீதக் கச்சேரிகள் விசேஷமாக நடைபெற்றன. ஸ்ரீ சங்கரஜயந்தி தினமாகிய 12—5—40 ஞாயிற்றுக்கிழமை புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் காலை மிதுன லக்னத்தில் ஸ்ரீ சங்கர குருகுல பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்வாமிகளால் அனுப்பப்பட்ட ஸ்ரீ முகம் வாசிக்கப்பட்டது. பிரதம கக்ஷியில் சேர்ந்திருந்த 5 வித்யார்த்திகளுக்கும் கல்லிடைக் குறிச்சி பிரம்மஸ்ரீ சாம்சிவ தீக்ஷிதர் அவர்கள் வேதாத்யயனத்தை உபக்ரமித்து வைத்தார்கள். பிறகு பாஷ்யத்தை அனுசரித்து மந்திரங்களின் அர்த்தத்தை ப்ரவசனம் செய்தார்கள்.

ஷை வித்யார்த்திகளுக்கு காவ்ய பாடமும் பிரம்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகளால் உபக்ரமிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீஸச்சிதானந்த தீர்த்த ஸ்வாமிகள் சாந்திபாடத்துடன் உபக்ரமித்தார்கள். பிறகு திவான் பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் குருகுலத்தின் ஆவச்யகதை என்னும் விஷயத்தைக் குறித்துக் மிகவும் விரிவாக உபந்யஸித்து பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் எவ்வளவோ மஹத்தான விக்னங்கள் ஏற்பட்ட போதிலும் கொஞ்சமேனும் சலிக்காமல் குருசேவை ஒன்றையே ப்ரதனமாகக் கருதி சங்காலயம் மஹத்தான புஸ்தக கோசம் இந்த இரண்டையும் நிர்மாண்ம் செய்து இன்று மூன்றுவதான சங்கர குருகுலத்தையும் ஆரம்பித்து தேசத்திற்கு செய்த உபாகாரத்தைப்போல் வேறு ஒருவராலும் செய்யமுடியாதென்று சொல்லி ஐயரவர்களுடைய முயற்சியை மிகவும் சிலோகித்துப் பேசினர்.

சேலம் வக்கீல் பிரம்மஸ்ரீ ஒய். கே. சேஷ அய்யர் அவர்களும் லௌகிகர்கள் கட்டாயம் தங்கள் குழந்தைகள் இந்த குருகுலத்தில் சேர்ப்பதுடன் இதற்கு வேண்டிய உதவிகளையும் விசேஷமாகச் செய்யவேண்மென்றும் சொன்னர்கள். கடைசியில் பிரம்மஸ்ரீ டி. கே. பாலசுப்பிரமண்யய்யர் அவர்கள், சிருங்கேரி ஸ்ரீ மதாசார்யேந்த்ராள் தனக்கு ஆக்ஞாபித்த மூன்று உத்தரவுகளில் ஏற்கனவே இரண்டை நடத்தி வைத்ததாகவும் மூன்றுவதான குருகுல பாடசாலையையும் இன்று ஆரம்பித்துவிட்டபடியால் அவர்களுடைய ஆஞ்ஜை பூர்த்தியால் இன்றுதான் கிருதார்த்தனனதாகவும் பேசினர். சாயங்காலம் ஸ்ரீ ஸச்சிதானந்த தீர்த்த ஸ்வாமிகள் ஆசார்ய பாஷ்ய காம்பீர்யமும் குருகுலவாசமும்,, என்னும் விஷயத்தைப்பற்றி ஸம்ஸ்கிருதபாஷையில் எளிய நடையில் எல்லோருக்கும் புரியும்படி மிகவும் அழகாக உபன்யஸித்தார்.

ந. கி.

நாகபட்டணம்

சென்ற விக்ரம-ஆ சித்திரை-மீ 30உ (12—5—40) பானுவாரம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கரஜயந்தி மகோத்ஸவத்தை முன் ஸ்ரீ சட்டநாத ஸ்வாமி கோவிலில் பகவத் ஸன்னதிகளில் வேத பாராயணத்துடன் விசேஷ அபிஷேகங்கள் செய்யப்பட்டு பிறகு ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய திரு உருவ படத்திற்கு விசேஷ பூஜைகளும் ஆராதனமும் நடத்தப்பட்டது. பிறகு ஸ்ரீ ஆசார்ய கைங்கர்யஸபா காரியதர்சி ஸ்ரீ என். சாம்பசிவ அய்யரவர்களால் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுடைய அவதாரத்தின் ரஹஸ்யத்தையும் விசேஷத்தையும் குறித்து சில வார்த்தைகள் சொல்லப்பட்டு காசி க்ஷேத்திரத்தில் பரமசிவன் சண்டாள வேஷம் போட்டு வந்த காலத்தில் சங்கர பகவத் பாதாளால் சொல்லப்பட்ட மனீஷா பஞ்சகத்தின் தாத்பாயத்தை விபரீதமாகச் சொல்லி அதை சீர்திருத்தக்காரர்களால் தங்கள் ஆலயபிரவேசத்திற்கு ஆதாரமாக சொல்லுவது சுத்த தப்பென்று கண்டிக்கப்பட்டது.

மாலையில் ஸ்ரீ குருமூர்த்தியின் உத்ஸவ விக்ரஹத்திற்கும் அபிமுகமாக ஸ்ரீ பகவத் பாதாளின் திரு உருவப்படத்திற்கும் வேத பாராயணத்துடனும் பஜனை கோஷ்டியுடனும் விமரிசையாக புறப்பாடு நடத்தப்பட்ட பிறகு கீழ்வாளுர் பிரம்மஸ்ரீ வி. கே. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுடைய சரித்திரமானது வெகு அழகாக உபன்யஸிக்கப்பட்டது. உபன்யாஸத்தில் சாஸ்திரிகள் அவர்கள் அவதாரத்தின் காரணத்தையும் திக்விஜய வைபவத்தையும் துர் மதங்களைக் கண்டித்து அத்வைத மதத்தை ஸ்தாபித்து பீடாரோகணம் செய்த விசேஷங்களையும் வெகு அழகாக விளக்கி காட்டினர்கள். வந்தனேபசாரங்களுடன் உத்ஸவமானது முடிவுபெற்றது.

(ந. கி.)

திருக்கோவிலூரில்

ஆர்யதர்மாபிவிர்த்தினி பிராம்மண மஹாஸபையின் ஆதரவின் கீழ் 12—5—1940 ஞாயிற்றுகிழமை மாலை 7மணிக்கு ஸ்ரீசங்கர ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீபகவத்பாதாளுடைய படத்தை, கீழூர் ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீரங்கநாதய்யருடைய கிரஹத்திலிருந்து அக்கிரஹாரத்தில் வேத கோஷத்துடன் ஊர்வலமாய் எடுத்துக் கொண்டுபோய் ஸ்ரீவீரட்டானேசுவரர் உற்சவ மண்டபத்தில் பூஜை, அர்ச்சனை நிவேதனங்கள் நடந்தன.

அச்சமயம் ஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்களால் ஸ்ரீ பகவத்பாதாளுடைய அவதாரமும் சரிதமும், ஆசார்யாளுடைய உபதேசங்களைப்பற்றியும் வெகு விரிவாக உபன்யசிக்கப்பட்டது.

தீண்டாமை விலக்கை பற்றி நவநாகரீகர்கள் ஆசார்யசரித்திரத்திலிருந்து அத்தாட்சி கொடுப்பது தவறென்றும், அங்கு காக்ஷியளித்தது சாக்ஷாத் காசிவிச்வனதரென்றும், சங்கரப் படக்காக்ஷியிலுள்ள சில நவறுதல்களையும் கண்டித்து பேசினர்.

ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க பிரசார கோஷ்டி,

செட்டிநாட்டில் பலவிடங்களில் பிரசாரம்.

ஆலயப்பிரவேச கண்டனம்.

கண்டனூர்

8—5—40உ கண்டனூருக்கு மாலை 3 மணிக்கு ஸனாதன தர்ம பற்றுள்ள மஹா ஜனங்கள் ஊருக்கு கொஞ்சதூரம் வெளியிலிருந்து அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் காரிய அத்யக்ஷகரான ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேச அய்யர் அவர்களையும், மதராஸ் டி. எஸ். ராமசாமி அய்யர், என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் ஆகியோர்களை மேள தாளங்களுடனும் விருதுகளுடனும், வேதகோஷங்களுடனும், பூர்ண கும்பம் வைத்து ஊர்வலமாக அழைத்துக்கொண்டு செல்லாயி அம்மன் கோவில் வாசலின் முன்னதாக சனாதன தர்ம பிரசாரம் நடைபெற்றது. அங்கு சுமார் 200 தனவணிகர்களும், 100 தனவணிக பெண்களும் இன்னும் மற்றவர்களும் விஜயம் செய்து இருந்தார்கள். கண்டனூர் கே. டி. பி. எல். பழனியப்ப செட்டியார் அவர்கள் ஸ்ரீமான் அய்யர் அவர்களை அக்ராஸனம் வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமான் என். நடேச அய்யர் அவர்கள், டி. எஸ். ரநமசாமி அய்யர் அவர்கள், என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் ஆகியோர் காங்கிரஸின் தற்கால நிலைமை எப்படி இருக்கிறது என்றும், அது இவ்விதம் கீழ்மை அடையவேண்டியதிற்கு காரணம் என்னவென்றும் இதெல்லாம் உண்மை காங்கிரஸ் திட்டத்தை மீறி நடந்த காங்கிரஸ்காரர்கள் அடைந்த பலாபலன்களையும் சுமார் 2 வருடத்திற்குமுன் மதுரை டவுனிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் 4000-க்கு மேல். இப்பொழுதோ 2000 சொச்சம் தான் என்பதையும் 1939 வருடம் ஜூன் மாதம் வரை மதுரை டவுன் வ. சு. சங்க அங்கத்தினர்கள் சுமார் 250. ஆனால் இந்த அக்ரம ஆலயப்பிரவேசம் நடந்தபிறகு சுமார் 7100 அங்கத்தினர்கள் இருப்பதின் விபரத்தை எடுத்து பேசினார்கள். சுமார் 6–30 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது. ஸ்ரீமான் காரைக்குடி எஸ். வி. எம். மெய்யப்ப செட்டியாரால் காரைக்குடி ஜில்லா சபை சார்பாக வந்தனோபசாரம் கூறப்பட்டது.

புதுவயல்

8—5—40உ சுமார் 6–40 மணிக்கு கண்டனூரை விட்டு புறப்பட்டு 6–50-க்கு புதுவயல் வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள ஆஸ்திகர்கள் ஸனாதன பற்றுள்ளவர்கள் எல்லோரும் இவர்களை மேளங்களுடன் வரவேற்பு செய்து கைலாஸ விநாயகர் கோவிலில் ராமாயணம் கிருஷ்ணசாமி சாஸ்திரிகள் பிரேரேபித்த வகையில் மதுரை அட்வகேட் ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேச அய்யர் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. அந்த ஊரிலுள்ள மஹா ஜனங்கள் ஆண் பெண் அடங்கலாக சுமார் 800 பேருக்கு மேல் குழுமி இருந்தார்கள். அய்யர் அவர்கள் மதுரை, தஞ்சாவூர் முதலிய க்ஷேத்ரங்களில் நடைபெற்ற அட்டூழியங்களையும் மற்றபடி ஆலயப்பிரவேச சட்டத்தை கண்டித்தும் மதுரையில் நடைபெற்றுவருகிற O. S. 40/39 ஸூட் விஷயமாயும் இன்னும் மதுரை ஸனாதன தர்ம வித்யாலய மாணவி ஸரஸ்வதி சாரதா சட்டத்தையும் அதை ஒழிக்க வழிதேட வேண்டுமென்றும் வெகு தெளிவாக எடுத்து காட்டியதுடன் பெற்ற குழந்தைகளுக்கு கல்யாணம் செய்யக்கூட சுயராஜ்யம் இல்லாத நிலைமையில் இந்த காங்கிரஸ்காரர்கள் மத உரிமையை இழந்ததினாலும் ஜாதிமதங்களைஒழித்ததாலும் தான் சுயராஜ்யம் கிடைக்கபோகிறது என்பதை கண்டித்தும் இதுமாதிரி இருந்தால் ஒருநாளும் சுயராஜ்யம் கிடைக்கபோவதில்லை என்று எடுத்து வெகு அழகாக கூறினான். சுமார் 8–15 மணிக்கு கூட்டம் வந்தனோபசாரத்துடன் கலைக்கப்பட்டது.

கோட்டையூர்

8—5—40உ சுமார் 8–40 மணிக்கு கோட்டையூருக்கு அகில இந்திய தலைவர்கள் ராவ்சாகிப் என். நடேச அய்யர் அவர்கள், என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், டி. எஸ். ராமசாமி அய்யர், சீனிவாசய்யர், செல்லையா பிள்ளை முதலியவர்கள் விஜயமானார்கள். கூட்டம் டி. எஸ். ராமசாமிய்யர் தலைமையில் நடைபெற்றது. மற்றபடி செல்லையா பிள்ளை, பத்மாஸனி, ஜெயலக்ஷ்மி, மீனாக்ஷி, ஸாரதா, ஸரஸ்வதி ஆகியோர்கள் கடவுளை திருபுகழ் மூலமாகவும் பாட்டுகள் மூலமாகவும் ஸ்தோத்திரம் செய்தார்கள். பிறகு என். நடேசய்யர் அவர்கள், என். சீனிவாசய்யர் ஆகியோர்கள் சங்க விருத்தியைப்பற்றியும், ஆலய வழிபாடுகளைப்பற்றியும் ஸ்வதர்மத்தோடு கூடிய சுயராஜ்யம் கிடைக்க பாடுபட எல்லோரும் முன்வர வேண்டுமென்றும் ஸனாதன தர்ம வித்யாலயம், ஆஸ்திக ஹிந்து மாதர் சங்கம், தார்மிக யுவச்சங்கம் இவைகளின் முக்யங்களை பற்றியும் எடுத்துபேசினார்கள். அதேபோல் இன்னும் 1 வாரத்தில் மாதர் சங்கம் ஸ்தாபித்து விடுவதாகவும் அங்குள்ள தனவணிகர்கள் வாக்களித்திருக்கிறார்கள், இரவு 10 மணிக்கு கூட்டம் சே.வு. ஸ்ரீ மெய்யப்ப செட்டியார் அவர்கள் காரைக்குடி ஜில்லா சபையின் சார்பிலும் கோட்டையூர் வ சு. சங்க சார்பிலும் வந்தனோபசாரம்கூறி கூட்டம் கலைக்கப்பட்டது.

கொ. லெக்ஷிமிபுரம்

9—5—40உ மாலை 4 மணிக்கு லெக்ஷிமிபுரத்தில் ஓர் மாபெரும் ஆலயப்பிரவேச எதிர்ப்பு கூட்டம் காரைக்குடி ஜில்லா சபையின் கீழ் நடைபெற்றது. என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், டி. எஸ். ராமசாமி அய்யர், ஆத்தங்குடி கதிரேசன் செட்டியார், ஸனாதன தர்மா வித்யாலய மாணவி சாரதா ஆகியோர் வெகு ஆர்வமுடன் நமது பண்டைகாலத்துபழக்கவழக்கங்களைப்பற்றியும் இப்பொழுது தற்கால நவ நாகரீகங்களை பற்றியும் பேசினார்கள். இத்துடன் வருகிற எந்த எலக்ஷன்களிலும் எந்த கக்ஷியாவது மதங்களிலேயோ, ஆலயங்களிலேயோ தலையிடும் பக்ஷத்தில் அந்த கக்ஷிக்கு தாங்கள் தங்கள் ஓட்டு உரிமை கொடுக்காதிருக்கும்படிக்கும் எடுத்து பேசினார்கள். சுமார் 7 மணிக்கு கூட்டம் ஜெயகோஷத்துடன் கலைக்கப்பட்டது.

நேமத்தான்பட்டி.

9—5—40உ மாலை 7–30 மணிக்கு என். சீனிவாச அய்யர் தலைமையில் ஓர் சனாதன தர்ம பிரசாரக் கூட்டம் பிள்ளையார் கூடத்துக்கு முன்பாக நடைபெற்றது. டி. எஸ். ராமசாமி அய்யர், ஆத்தங்குடி டி. பி. ஜெகதீசய்யர், கதிரேசன் செட்டியார் ஆகியவர்கள் மதுரையில் எவ்விதமாகவும் திருட்டுத்தனமாகவும் ஆலயப்பிரவேசம் செய்தார்கள் என்பதைபற்றி எடுத்து உரைத்தார்கள். அத்துடன் மாஜி காங்கிரஸ் மந்திரிமார்கள் எவ்விதம் சரணாகதி அடைந்து அவசர சட்டம் (Ordinance) கவர்னரிடம் பெற்றார்கள் என்றும் பதவி ஏற்பதற்கு முன் இவ்விதமான அவசர சட்டங்களை போடக்கூடாது என்று எதிர்த்தவர்கள் இப்பொழுது அதையே உபயோகித்தார்கள் என்றும் எடுத்து விரிவாக பேசினார்கள். கடைசியில் 9 மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுபெற்றது. சுமார் 200 ஜனங்கள் குழுமி இருந்தார்கள். அங்கு சில விஷமிகள் கலாட்டா செய்து தனிக் கூட்டமும் போட்டு பார்த்தும் ஒன்றும் பலிக்காமல் போனதுகளைப்பற்றி தெரிவித்துகொள்கிறோம்.

தேவகோட்டை

10.5.40 மாலை 7-30 மணிக்கு நகரச் சிவன் கோயிலில் கூட்டம் நடைபெற்றது. அதற்கு கதிரேசன் செட்டியார் அவர்கள் ஸ்ரீமான்ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்களை தலைமை வகிக்கும்படி கேட்டுகொண்டதின் பேரில் ஷெயார் தலைமையில்நடைபெற்றது. ஸனாதன தர்மவித்யாலய மாணவி கிருஷ்ணவேணி என்னும் சிறுகுழந்தை இனி ஒரு க்ஷணமும் பிரியேன்” தேவி மீனாக்ஷி தேஹமே முதம என்ற பாட்டுகளையும் பத்மாஸனி என்பவள் “சாமஜ கணபதே” கைமாறு காணேனையா என்ற ஸ்தோத்திரபாடல்களையும், விசாலம், சாரதா, சரஸ்வதி ஆகியோர் சம்போ மகாதேவா என்ற கீர்த்தனத்தையும் மதுரை திருப்புகழ் எம். செல்லையா பிள்ளையால் கொலைமதகரியன என்ற இனிய திருப்புகழும்பாடப்பெற்றது. பிறகு அய்யர் அவர்கள் பிரசார விஷயத்தின் அவசியத்தை பற்றியும் அ.இ.வ.சு சங்கத்தின் முக்ய நோக்கங்களை பற்றியும் மலபார் ஆலயப்பிரவேச சட்டம் எக்கதி அடைந்தது என்பதை பற்றியும் மதுரையில் எவ்விதம் நடந்தது பற்றியும் O.S 48/39 ஸூட்டின் ஜட்ஜ்மெண்டை பற்றியும் மிகதெளிவாக பேசினார். இத்துடன் அ.இ.வ.சுசங்கத்தின் 5 நிர்மாண திட்டங்களை பற்றியும் அதாவது 1. வ.சுசங்கம் எல்லா ஊர்களிலும் ஸ்தாபிக்கப் படவேண்டும். ஆஸ்திக ஹிந்து மாதர்சங்கம் 3.ஸனாதனதர்ம வித்யாலயம் 4. தார்மிக யுவசங்கம் 5 ஸ்வதர்மத்தோடு கூடிய ஸ்வராஜ்யம் இவைகளை ஏற்படுத்த பாடுபடவேண்டும் என்றும் பேசினார். ஸ்ரீ மான் என்.ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீநாகரத்ன சாஸ்திரிகள், வெங்கடசுப்பிரமணியன், பாஷ்யாச்சாரி டி. பி. ஜெகதீச அய்யர், கே.ஆர் நாராயணஸ்வாமி சாஸ்திரிகள் ஆகியோர் பேசினார்கள். இரவு சுமார் 11 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது. 800 ஜனங்களுக்குமேல் கூடியிருந்தன. எஸ்.வி.எம் மெய்யப்ப செட்டயார் காரைக்குடி ஜில்லா சபையின் சார்பாக வந்தனோபசாரம் கூறினார்.

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

அ. இ. வ. ஸ். ஸங்க பிரசாரக் கோஷ்டி,

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

காளையார் கோயில்

மாலை 5 மணிக்கு காளையார் கோயில் வ. சு. சங்க அங்கதினர்களும் மற்றுமுள்ள ஆஸ்திக பெரியோர்களும் மேள வாத்தியங்களுடனும் யானை மற்ற விருதுகளுடனும் ஸ்ரீமான ராவ்சாகிப் N. நடேச அய்யர் அவர்கள் ஸ்ரீமான் N. R. கிருஷ்ணசாமி அய்யங்கார் மதராஸ் T S ராமசாமி அய்யர் என். ஸீனிவாச அய்யர் K R நாருயணசாமி சாஸ்திரிகள் ஸ்ரீ செல்லையா பிள்ளை முதலியவர்களை வேத பாராயணங்களுடனும் ஜெய கோஷத்துடனும் வரவேற்பு செய்தார்கள். காளீஸ்வரர் கோயில் முன்பாக T S ராமசாமி அய்யர் தலைமையின் கீழ் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீராமசாமி அய்யர் ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்கள் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யங்கார் ஸ்ரீராமசேஷசாஸ்திரிகள் திருப்புகழ் எப். ஸ்ரீசெல்லையா பிள்ளை ஆகியோர் 2 வருடங்களுக்குமுன் எவ்விதமாக ஊக்கத்துடன் காங்கிரஸில் வேலை செய்தார்கள். என்றும் ஏன் இப்பொழுது விலகிகொண்டார்கள் என்றும் ஊக்கமாகவும் மிகதெளிவர்கவும் எடுத்து கூறினார்கள்.

1000 ஜனங்கள் கூடி இருந்தார்கள். அதில் 100க்கு 60 பேர் வீதம் தமிழர்களாகவுமிருந்தார்கள். கூட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது. சுமார் 8மணிக்கு கூட்டம் கலையப்பெற்றது. காளீஸ்வர சாஸ்திரிகள் வந்தனோபசாரம் கூறி இதுபோல் அடிக்கடி வந்து தர்மபிரசாரம் செய்து ஒன்றும் அறியாத பாமர ஜனங்களை மற்ற கக்ஷிகாரர்கள் ஏமாற்ற முடியாமலிருக்க வேண்டியதிற்கு வேண்டியதுகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாட்டரசன்கோட்டை.

சுமார் 8 மணிக்கு பெருமாள் கோவில் பின்புறத்திலுள்ள ஓர் பெரிய மடத்தின் முன் ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அய்யர் அவர்கள் மதுரை ஆலயப்பிரவேசம் எப்படி நடைபெற்றது என்றும் வைகையாற்று மண்டபத்தில் அஹிம்ஸை, ஸத்தியம் என்பவைகள் எவ்விதம் மற்ற வகுப்பினர்களால் முறணுக கையாளப்பட்டது என்றும் மூர்ச்சை அடைந்து கிடந்த பையனை ஸ்ரீமான் மாஜிமந்திரி "இவன் இறந்து போய்விட்டானு" என்று கேட்டதையும் வைகையாற்று மைய்ய மண்டப நிகழ்ச்சிகளைப்பற்றியும் எடுத்து பேசினார்கள். N. R. கிருஷ்ணசாமி அய்யங்கார், T. S. ராமசாமி அய்யர் T. P. ஜெகதீச அய்யர் ஆகியவர்கள் இன்னும் மற்றவர்களும் வருகிற தேர்தலில் யாருக்கு நமது ஓட்டு உரிமைகளை கொடுக்கவேண்டும் என்றும் எடுத்து பேசினார்கள் இரவு 11மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது. சுமார் 300 ஜனங்கள் கூடியிருந்தார்கள். காரைக்குடி ஜில்லா சபை காரியதரிசி ஸ்ரீமான் செ. வு. மெய்யப்ப செட்டியார் அவர்கள் வந்தனோபசாரம் கூறினார்கள் கடைசியில் ஸனாதன தர்மத்திற்கு ஜே என்ற கோஷத்துடன் முடிவு பெற்றது.

ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவம்,

விழுப்புரம்

விழுப்புரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பாடசாலையை உத்தேசித்தும் ஷை பாடசாலையின் ஒரு நிர்வாஹியான ஸ்ரீமான் மஹாதேவய்யரவர்கள் கிரஹத்தில் சங்கர ஜயந்தி உத்ஸவம் மஹன்யாஸ, ருத்ர, பாஷ்யம் முதலிய பாராயணங்களுடன் ஷோடசோபசார பூஜையும் பிரம்மஸ்ரீ புடார்ஜுன சர்மா என்பவரால் ஸ்ரீ சங்கர அவதார சரித்ரமும் உபன்யஸிக்கப்பட்டது. பாணும்பட்டு ஸ்ரீ துரைஸ்வாமி அய்யரவர்கள் க்ரஹத்திலும் இன்னும் சிலவிடங்களிலும் ஜயந்தி நடைபெற்றது. (ந.கி.)

மூடிகொண்டான்

இவ்வூரில் ஸ்ரீ ஆதி ஆசாரியார் அவர்களுடைய ஜயந்தி கொண்டாடப்பட்டது. அன்று காலை 7 மணிக்கு ஊரிலுள்ள ஆஸ்திகர்கள் கூடி ஷையூர் சாமவேத பாடசாலையில் உபநிஷத் பாராயணங்களும் பாஷ்ய பாரயணங்களும் செய்தார்கள். 10 மணி முதல் ஸ்ரீ ஆசார்யாளின் பூஜை சிறப்பாக நடந்தது. மாலை 4 மணிக்கு ஸ்ரீமடம் வித்வான் ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரியள் அவர்கள் தலைமையின்கீழ் பைங்காநாடு ஸ்ரீ ஸீனிவாச சாஸ்திரியள் ஒர் உபந்யாஸம் செய்தார்.

இரவு 8 மணி முதல் சிவ ரஹஸ்யத்தில் உள்ள ஆசார்யாள் அவதாரம் பைங்காநாடு ஸ்ரீ ராஜா சாஸ்திரியள் அவர்களால் ப்ரவசனம் செய்யப்பட்டது. (ந.கி.)

சிவகங்கை

12—5—40உ மாலை 3 மணிக்கு சங்கர மடாலயத்தில் ஓர் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. அங்கு சங்கர ஜயந்தி உத்ஸவமும் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. சுமார் 1000 ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஒலிபரப்பும் கருவி அமைக்கப்பட்டு இருந்தன. ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்கள் சங்கர விஜயம் என்ற விஷயமாய் உபந்யாஸம் செய்தார்கள். கடைசியில், அவதார புருஷராக விளங்குகிற ஸ்ரீ சங்கர பகவத் பாதாளை இப்பொழுது சினிமா படங்களில் எடுத்து அதை எவ்விதமாக கேவலமாகக் காட்டுகிறார்கள் என்றும் அப்பேர்ப்பட்ட படங்களை காட்டவொட்டாமலும் பாமர ஜனங்களை ஏமாற்றாமலிருக்கவும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளால் எடுத்துகொள்ள பட்ட முயற்சிகளைக்கொண்டு அதற்கு ஆதரவாக அவர்களால் அனுப்பட்ட பாரங்களில் கையெழுத்து செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் 10 பாரங்களையும் அவ்வூர் முக்யஸ்தரான ஸ்ரீமான் எம். எஸ். ராமஸ்வாமி அய்யர் அவர்களிடம் கொடுத்துவிட்டு பிறகு சுமார் 4-15 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது. மற்ற ஊர்களுக்கு பிரயாணமானார்கள்.

மாலை 5 மணிக்கு சிவகங்கையிலிருந்து புறப்பட்டு மதுரை வந்து சேர்ந்தார்கள். இன்னும் 2, 3, நாட்களில் சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், தென்னாற்காடு, திருநெல்வேலி, இன்னும் செட்டிநாடுகளில் உள்ள மற்ற கிராமங்களிலும் பிரயாணமாகி பிரசாரம் செய்ய போகிறார்கள் என்று தெரிகிறது. இப்பொழுது பிரயாணமாகி சென்ற கிராமங்களில் எல்லாம் சபைகள் நிர்மாணம் செய்யப்பட்டு விட்டதென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ராதாமங்கலம்

விக்ரம-ஆ சித்திரைமீ 30உ (12-5-40) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் ஜயந்தி மகோத்ஸவம் கிராம மகா ஜனங்களால் அதிக உத்ஸாகத்துடன் நன்கு கொண்டாடப்பெற்றது. அன்று மாலை 3-30 மணி முதல் 5 மணி வரையில் ஜம்புகேச்வரம் ஸ்ரீ ஆசார்யாளின் வேதாந்த வித்தியா ஸ்தானத்தில் வேதாந்த சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவரும் தர்க்க சிரோமணியுமான, ராதாமங்கலம் கி. நாராயண சாஸ்திரியளவர்களால் ஸ்ரீ மகா சன்னிதானத்திலிருந்து அனுக்ரக பூர்வகமாக அனுப்பிய சங்கர விஜய கிரந்தத்தின் அவதார கட்டமும் சர்வஞ்ஜ பீடா ரோஹண கட்டமும் பிரவசனம் செய்யப்பட்டும் ஸ்ரீ ஆசார்யாள் அத்வைத மதத்தை பிரதிஷ்டாபனம் செய்து அதன் மூலமாக லோகத்திற்கு செய்த பரமோபகாரத்தையும் அத்வைதத்தின் சிறப்பையும் பொருத்தமான திருஷ்டாந்தத்துடன் உபன்யஸிக்கப்பட்டு இறுதியில் பழம் சந்தண தாம்பூலம் சுண்டல் முதலியன வினியோகிக்கப்பட்டு இனிது முடிவு பெற்றது. ஸ்ரீ ஆசார்யாளின் ஆக்ஞா பிரகாரம் ஏகாதசி முதலான விசேஷ தினங்களில்ஸ்ரீமத் ஆசார்ய கைங்கர்யமும் கிராம மகா ஜனங்களால் ச்ரத்தையுடன் நன்கு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீமடம் முத்திராதிகாரி
ஆர். வெங்கட்டரமணி அய்யர்.

பம்பாய்

பம்பாய், மாதுங்காவில் ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவமானது வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. கல்கத்தா ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் சில உபன்யாஸங்கள் செய்தார். ஹோமம் முதலியவைகள் செய்யப்பட்டன.

ஸ்ரீ சங்கரஜயந்தியன்று வெகு குதூகலத்துடன் ஸ்ரீ ஆசார்யாள் படத்தை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு உத்ஸவம் இனிது நிறைவேறியது. (ந.கி.)

சந்தைப்பேட்டை, புதுக்கோட்டை

8-5-40 முதல் 12-5-40 முடிய புதுக்கோட்டை டவுன் சந்தைப்பேட்டை ஏ.வி. வித்யாசாலையில், ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம், பக்தர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பிரதி தினம் காலையிலும் மாலையிலும் வேதபாராயணமும், பாஷ்யப்ரவசனமும் நடைபெற்றது. ஒவ்வொரு தினமும் இரவு 7 மணி முதல் மாயவரம் பிர்ம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்த்ரிகள் அவர்கள் பகவத்பாதாளின் சரித்திரத்தை ப்ரவசனம் செய்தார்கள்.

12-5-40 மாலை 5 மணிக்கு திருச்சி அட்வகேட் ப்ரஹ்மஸ்ரீ ஏ. வி. கோபாலாச்சாரியார் அவர்கள் வேதாந்த தர்சனம் என்ற விஷயம் பற்றி உபந்யசித்தார்கள். அன்றிரவு மங்கள வாத்யத்துடன் நன்கு அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் ஆசார்யாளின் படம் ஊர்வலமாகக்கொண்டு வரப்பட்டது இந்த ஜயந்தி மஹோத்ஸவத்தை, ப்ராஹ்மணர், பிராஹ்மணரல்லாதார், அத்வைதிகள் விசிஷ்டாத்வைதிகள் எல்லோரும் மிகுந்த உத்ஸாகத்துடனும் பக்தி சிரத்தையுடனும் நடத்தியது குறிப்பிடத்தக்கது. (ந.கி.)

லலிதாத்ரிசதீ
நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும் விலை 0—3—0
கிடைக்குமிடம்:- ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

போலிகள் ஜாக்கிரதை!

அ மி ர் தா ஞ் ச ன ம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியமருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறுர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

வேத வித்வத்ஸமாஜம்

ஸர் அல்லாடி, கிருஷ்ணாமி அய்யரின் சிரத்தை

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் நடந்து வரும் வேத வித்வ ஸபையில் சித்திரைமீ 22உ சரியான 4—5—40 சனிக்கிழமை இரவு 7 மணிக்கி ஸர் அல்லாடி கிருஷ்ணஸாமி அய்யர் அக்கிராஸனத்தின் கீழ் நடந்ததில் வாரம் முடிந்ததும் அக்ராஸனதி பதி பேசுகையில் வேதம் இசுவரன் மாதிரி நித்யம். அந்த வேதம் பிராமணர்களுக்கு தாரகம். ஆகவே வேதமென்பது பிருமணர் களுக்குமூலசொத்து. அதன் அத்தம், ருக்கு களின் பிரயோஜனம் தெரிந்தால் ரொம்ப நல்லது என்று பேசி முடித்தார் ஷை ஸபைக்கி ஜட்ஜி ஸ்தானமாக இருந்த விஷ்ணம் பேட்டை பிர்ம்மஸ்ரீ ராமஸ்வாமி தீக்ஷிதர் அக்கிராஸனருடைய அபிப்ராயத் தை ஒட்டி பேசினதாவது:-வேதம் 5 பாகம் 1 மந்தர பாகம் 2 பிருமண பாகம் 3 அர்த்தவாத்பாகம்4 நிந்தாபாகம் 5பிரஸம்ஸ பாகம் என்றும் ஒவ்வொரு பாகத்துக்கும் மந்தரமென்பது இன்னது, பிருமணத்தின் லக்ஷணம் உதாஹரணத்துடன் அர்த்த வாத மென்பது இன்னது, நிந்தை என்பது, பிர சம்ஸை இன்னது என்று ஒவ்வொன்றும் உதாஹரணம் காட்டி சொல்லி கேவலம் வேதத்துக்கும் பலன் உண்டு என்று சொல்லி முடித்தார் அந்த ஸபையில் சுமார் பெரிய மனுஷரில் 150 பேர்களும் வேத வித்வான்களில் 100 பேர்களும் இருந்தார்கள் ஸபை 9¾க்கு முடிந்தது.

சுந்தரமய்யர்,
காரியதரிசி,

வைகாநவஸ அர்ச்சகர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஆலயங்கள் புராதன மார்கப்படியும் க்ஷேமத்தை விளைவிக்கவும் இருக்கவேண் டியது அவசியமாகும். நம்மதரீதிப்படி ஆல யங்களை ரக்ஷிக்க வேண்டியது ஒவ்வொரு மதாபிமானிகளின் கடமையாகும். பொது வாக ஆகமரீதியின்படி பூஜைகள் நடக்க வேண்டும். அப்பூஜைகளினுல் எப்படி ஈசுவரசான்னித்யம் ஏற்படுகின்றதோ அது போல் மற்றவைகளால் அல்ல என்பதை யாவரும் ஒப்புகொள்ளுகிறுர்கள், ஆகை யால் ஆகமங்களில் உள்ளபடி கற்கவேண் டியது அர்ச்சகர்களின் கடமையாகும். நமது ஆகமங்களுக்கு சிற்சில இடங்களில் தூரதேசங்களில் பாடசாலைகள் ஏற்படுத்தி யிருந்தாலும் தக்க வஸதிகளுடன் சுத்தா சுத்தங்களை அறிந்து நமக்கு கற்பிக்ககூடிய பாடசாலைகள் சமீபத்தில் இல்லாதது ஓர் குறையாகும். அவ்விஷயமாக நமது அசிரத் தையும் அக்குறையை விருத்தி செய்விக்க கூடியதாகவே ஆகின்றது. நமது ஆகம சாஸ்திரங்கள் லோபமடைந்தது. போகமீதி யானபுஸ்தகங்கள் ஓலைஏடுகளிலும். மற்றும் அறிஞர்களின் வாயில் மாத்திரம் உள்ளது நமது பெறும் குறையே. ஆகையால் எழுத்து ஏடுகளிலிருந்து எடுத்து சிரமத்தை பாருமல் அச்சிட்டு தெலுங்கு அக்ஷரங் களில் விநியோகிக்கும் டி. ரெங்காசார்லு அவர்களின் முயற்சியை கொண்டா டவேண்டியது

॥ श्रीः ॥

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கரர்சாரிய ஸ்வாமிகள் அவர்கள்ஸ்ரீமடம் சிஷ்யகோடிகளுக்கு செய்த

ஆக்ஞா ஸ்ரீமுகம்

பழநி ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சிவன் அவர்களால்
ஆடக க்ஷேத்திரமென்னும்
திருவாரூர் ஸ்ரீ தியகராஜ ஸ்வாமிக்கு

121 குடம் கெங்கா தீர்த்தம் தருவித்து

விக்கிரம-ஞு ஆனி-மீ 22உ வெள்ளிக்கிழமை அமாவாஸ்யை
திருவாதிரை நக்ஷத்திரங்கூடிய சுபதினம்

5—7—40 முதல் ஆனி-மீ 32உ (15—7—40) ஸோமவாரம் முடிய 11 தினமும் 121 வைதீகர்களைக்கொண்டு ப்ரதிதினமும் ஒவ்வொருவரையும் 11 தடவை மஹன்யாஸத்துடன் ஸ்ரீமஹாருத்ரபாராயணம் செய்வித்து ஆனி-மீ 32உ (15—7—40) சோமவாரத்தன்று இரவு தக்ஷிணயன புண்யகாலத்தில் ஷை 121குடம்கெங்காதீர்த்தத்தையும் அபிஷேகம் செய்விப்பதென்றும், ஸ்ரீ வன்மீகநாத ஸ்வாமி, ஸ்ரீ கமலாம்பாள், ஸ்ரீ நீலோத்பலாம்பாள், கணபதி, சுப்ரமணியர் ஆகிய ஸ்வாமிகளுக்கும் முறையே ஜபம் செய்வித்து கெங்காதீர்த்த அபிஷேகமும், இந்த 12-தினங்களுக்கு அன்னதான தர்மமும் செய்விப்பதென்று தீர்மானம் செய்திருக்கிறபடியால், ஸ்ரீமடம் சிஷ்யகோடிகளில், ருத்ரபாராயணம் செய்யக்கூடியவர்கள் அவரவர்களால் முடிந்தவரை ஆத்மார்த்தமாக வைதீக காரியங்களை செய்துகொடுக்க வேண்டியது.

அன்னதானம் செய்துவைக்கக்கூடிய பிரமுகர்கள் 12-தினங்களில் தங் களால் எவ்வளவு தினங்களில், தானே இருந்து நிர்வகித்து நடத்திக்கொடுக்கக் கூடுமோ அவ்வளவு தினங்கள் தங்கள் சக்திக்கு தக்கவாறு நடத்திவைக்க வேண்டியது.

இவ்வித உத்தம கைங்கரியங்களை நடத்திக்கொடுத்து ஸ்ரீ தியாகராஜ பெருமான் கிருபையால் இகபர ஸாதனங்களை அடையவேண்டியது.

முகாம் அரசவனங்கோடு,
பிரமாதிஞு பங்குனிமீ 18உ } **நாராயண ஸ்மிருதி:**

NB:—பொருளுதவி செய்பவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்தக்கு அனுப்பும்படி கோரப் படுகிறது. பழனி சிவன், No. 9 சந்நதித்தெரு, திருவாரூர், S. I. Ry.

காந்தி வைஸ்ராய் சந்திப்பு?

பார்லிமெண்டில் பிரஸ்தாபம்

காந்திஜி அரசியல் நிர்ணயஸபைக்குப் பதிலாகத் தலைவர்கள் மஹாநாடு கூடுவதை ஆதரிப்பதால் இவ்விஷயமாக மேற் கொண்டு வேலை செய்ய வைஸ்ராயும் காந்தியும் கலந்து பேச ஏற்பாடுசெய்யப் படுமா வென்று பார்லிமெண்டில் கேழ்க் கப்பட்டது. உதவி மந்திரி பதிலளிக் கையில் ஏற்கனவே சில தடவை இம் முயற்சி பலன் தரவில்லையென்றும் வைஸ் ராயே முன்னுடி இதில் நடவடிக்கை எடுத் துக்கொள்ளுவது உசிதமா என்பதைப் பற்றி யோஜனை செய்யவேண்டு மென்றும் பதில் அளித்தார்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.